933

உ

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந் துணை

செந்தூர் ரெயில் வழிநடைச் சிந்து.

இஃது

வித்வான். ஆறுமுகனேரி
K. விசுவனாதபிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்றது

அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து,
வண்ணம், பைரவி, தோடி என்ற
வர்ணமெட்டு.

திருநெல்வேலி
ஸ்ரீயப்பிரகாசினி பிரசில், பதிப்பிக்கப்பட்டது.
ரிஜிஸ்டர் காப்பிரைட்

[விலை] 1923. [அணா 2
காப்பி 1000

926.417
N123
17081

திருச்சிற்றம்பலம்.

செந்தூர் ரெயில்வழி நடைச்சிந்து.

கடவுள் வணக்கம்

காப்பு

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன்னம்பலவன்
ஞான குருவாணியை உள் நாடியே தேனைநிகர்
செந்தூர்வழி நடையைச் செப்பினேன் செந்தமிழால்
எந்தப்பாவலரும் இசைவர் என்று

அரசவாழ்த்து

வையகம் செழிக்க எங்கும் மாமழை பொழிக பத்மச்
செய்யவள் தனை நிகர்த்த சீமாட்டி மேரித்தாயும்
அய்யனும் அஞ்சாம் ஜார்ச்சும் அன்புடன் நீடுவாழ்க
மெய்உவில்லிங்டன் டேவிஸ் வேந்தரும் வாழ்கமன்னே.

சிந்து

செந்தூர் ரெயில் வளம்பாரீர் ஜில்லாபோர்டார் நலம் தேரீர்.
எந்தச் செகமும் புகழ் மயில்வாகனக்
குகனார்தரு உயர்மாதலச் (செந்தூர்)

1 ஆயிரத்தொண்ணூற்றெட்டாண்டு ஆனபாசிஇரண்டாந்திருநாள்
இவ்வத்தி அற்புததெரிசனம் வானவற்க்குங்கிடையாது [ள்
இன்றுமுதல் ரெயில்ஓட்டம் நாளை
செந்தூர்வர போர்ட்டார் நாட்டம் (செந்தூர்)

2 இன்று இருபத்திரெண்டு இரெண்டுருபத்தி மூன்றும்
வருஷம் எங்கள் சிவஞான வள்ளல்வேளடற்கிசைந்து
கவணர் வில்லிங்டன் பிரபுடன் எண்டிசை மாந்தரும் வருவர்
பிந்தமுகூர்த்தத்தை நாடி எண்ணிலடங்காத கோடி (செந்)

3 பாரத வருஷமாம் நாடு எவரும் பாவிப்புகழும் தெந்நாடு
உயர் பலமாமணி நலமாவரு புலமேவர்புகழ்
தாமாகிய பரதகண்டமிது காணும்
இங்கே விரதமுண்டனேகபபேணும்.

4 எங்கும் புகழ் தமிழ்நாடு இங்கிலீஸ்மன் ஏற்றமுள்ளனர்நாடு
சங்கந்தரு தமிழ்வாணரும துங்கந்தருபலமாமுனிவரும்
நல்ல ருத்திரம் சேர்ந்த தொல் நாடு
பஞ்சாஸ்திரம ஆர்ந்த இன்னாடு.

17708

பட்டணம் பாம்பே பங்காளம்
மூன்று பாரமான ராஜதானி இதிற் பலவாகிய ஜில்லாமுதல்
தலைமாகிய தாலூகா பார்த்த திருநெல்வேலி மேலாம்
இதன் பார்படும் திரவியம் நாலாம்

6 பொதிய மலைவளம் சிறந்து நல்ல பூம்புனற்கங்கை திறந்து
உயர்புனி தந்தரு துறையேகியே பொருதுந்திய
அலையோடுற போந்ததாம்பிரபற்ணி கண்டு
இது சாந்த ஜீவநதி யென்று

7 வாயுவேகமனவேகமாக வருகுது புது ரெயில்மெயில்
இந்த வழி ரெயில் திருச்செந்தூர்வர
வகைதேடிய மாதவர் மேதாவியர் சிலருண்டு
அதை பொன்னேயி வள்ளலும் கண்டு

8 ஆயிரத்தொள்ளாயிர மூன்று இஃதானபெப்பிரவரி யேழில்
அழகாகவே ரெயில் வரவேண்டிய அம்ஸங்கள் பல
அமைந்திட பெட்டிஷன் தீட்டி
அதை அறிவுடையோர் மெச்சக்காட்டி

9 அப்போ ஜில்லா போற்ட்டுதலைவர் ஆன பக்ளிக்கலெக்ட்டர்
அப்பாலு முயர் பெட்டிஷனை அங்கீகரித்து
கருணையோடு கவர்மெண்டுக்கனுப்பிய உபாயம்
அந்த மகராஜன் செய்த சகாயம்

10 சாங்கிஷன் ஆயிற்று உடனே
அப்போ சற்வை நடந்ததும் திடமே
அதற்கு பாங்காகவே பட்டாவரி தீர்ந்தானது
வசூலானது பனனிரெண்டு லக்ஷமாகும்
மேலும் யிருபத்தொரு லக்ஷம்வேணும்

11 இந்த பண்டில் வயன் போட்டார்
மறறதுகைக்கும் ஆக ஜில்லா போர்டார்

எத்தனையோ பிரையத்தனம் செய்கையில்
ஜெர்மன் சண்டை மூண்டது அதனால் தண்டுவாழும் கப்பி
மீண்டது பலவருஷங்களும் மேக நீண்டது.

12 இந்த நிலைமையில் சீமான் சிவஞானவானெனும் பூமான்
இந்த ஜில்லா போர்ட்டில் தலைமை வகித்து
இங்கிலீஸ உய்ர்பட்டங்களுந்தரித்து
இருக்கின்ற வேலையில் நினைந்தார்
திருச்செந்தூர் ரெயிலுக்கு துணிந்தார்.

13 சிவஞானம்பிள்ளை சீலமெல்லாம்
என்றும் தெரிந்துகொண்ட கவர்மெண்டார்
செகமோகன மிக நயமாகவே எழுதியபடியே தொகை
யுதவினர் சேர்ந்த முப்பத்திமூன்று லெட்க்ஷம்
செய்த வேலை பெறும் அனேகலெட்க்ஷம்

14 இவ்விருபத்தி மூன்றாரம்பம்
ரெயில் எப்படியும் செந்தூர்சேர
எண்டிசையும்புகழ் சிவஞான சீமான் செய்த யத்தினம்
எத்தனை எத்தனை கோடி எற்கும் பொருள்களை நாடி

15 வேளாண் மரபிற் பிறந்து நாலாவித பாஷையும் சிறந்து
இவர்விதானை தெரிந்த சதுரராகவின் செந்தூர்ரெயில்
வேலையை சீக்கிரம் முடித்தார் இந்த பாக்கியம் ஈவர்
படைத்தார்

16 எத்தனையோரெயில் பாலம் இன்னும் எத்தனையோதண்ட.
வாளம் இதில் பெளிலார் தரு மிகநேர்வரு
எத்தனையோ கருடர் பாளம் இங்கு சேகரித்தது நற்கிலம்
இதெல்லாம் ஜில்லா போர்ட்டார் சீலம்

17 பத்து நிமிஷம் வண்டியேக
நரம் சற்றும் பிசகாமல்போக
இந்தப் பாலத்திருந்து செந்தூர் மேலத்துவரை சீக்கிரம்
டிக்கட்டு எடுப்பீர்
மற்றது வீணெண்ணம் யாவும் விடுப்பீர்.

18 வண்டிவரவும் உட்கார்ந்தோம்
மனது பரவசம் நேர்ந்தோம்
எந்தமதிவாணரும் புகழ் சுலோசனமுதலியார் பாலம்மாக்ஷீ
என்னாலே சொல்லவும தரமோ
எட்டுமேட்டும் சொல்வேன் விவரமே

19 எங்கும் சொர்ணமயமேடை
இங்கே இந்து காலேஜ் உயர்சி ஊடே
இளந்தளிர்வார் தருமதி மண்டலவளையும் தொடர்சோலை
வழம் என்ன துளிர் துளிர்ப்பு
அதை சுற்றும் பழனப் பளபளப்பு

20 ஆலயங்கடைத்தெரு வீதி
நல்ல அந்தணர் கூட்டமும்பாதி
இதில் அணியும் மணி நவரெத்தினம்
ஆடைகனி காப்பிக்கடை அணி அணியாய்யிருக்குது காணும்
இது யார்க்கும் நேத்திரானந்தம்தோணும்

21 பாளையங்கோட்டை முதல் ஸ்டேஷன்
இது பலமா யமைந்தது விசேஷம்
இந்நகர் பலஆகிய மணிமேடையும் பாரிலுயர் சிகரங்களும்
இது பார்மகள்க்கோர் நெற்றிதிலகம்
பலகாக்ஷிகள் அமைவித்வகழகம்.

22 கோட்டை கொத்தள உண்டு
கிரிஸ்தவக்கூட்டம் வெகு பண்டு
கோபுரம்சிவாயயம்பண்டு குலவுபூமி பாளையங்காற்பாசனம்
அந்தப்பக்கம் யாவும் பழனம் உயரும்
பத்மங்களில் அன்னம பயிலும்.

23 செய்துங்க நல்லூர் ஸ்டேஷன்
இதில் ஜெயதுங்க பாண்டியன் இருந்தான்.
செழுந்தேனொடு பொருநைநதி பாய்ந்து
செந்நெல விளையும் பழனம்
இங்கே தீனன் சோணாசலம் சத்திரம்
சேர்ந்தோர்கெல்லாம் அன்னம் நித்யம்.

24 அந்தணர் வீதியும் உண்டு
யிதிலாம் மாத்வர் மரபதிகம்
சிந்தையுருகும்படியான சிவாலயம்
விஷ்ணு க்ஷேத்ரம்செழிக்கும்
செங்கழுநீர் ஓடை மலரும்
செந்நெல்விளை மிக்கவயலும்.

25 ஸ்ரீ வைகுண்டம் ஸ்டேஷனும் பாரீர்
உங்கள் ஜன்மவிடாய் இங்கு தீரீர்
எந்த ஜெகமும் புகழ்தலமாமிது சரதம் சொல்வேனின்ன
திவ்விய தாம்பிரவாணி அணைப்பாலம் [மும்
இதின் தெற்குகோட்டைபிள்ளை சத்திரம் அனுகூலம்.

26 உலகிலுள்ள எம்பும் வழக்கும்
இங்க வூர்பேரை கேட்டால் ஓடி ஒளிக்கும்
பலகலை ஆய்ந்தவரும் நீதிமன்னரும் விவகாரியரும்
பார அந்தணர்கள் கூட்டம் செல்வர்பாராட்டும்
வேளாள முதலியோர் கோஷ்டம்.

17708

27 இங்கிலீஷ் உயர்ந்த பாடசாலை
ஏற்ற ஆஸ்பத்திரி வளம் சோலை
எந்ததிசையும் புகழ் தாலுகா போர்ட்டும்
நீதிகோடு கச்சேரியும் அதற்கேற்ற மன்னவர் சிறப்பும்
மற்ற ஆற்றல் மிகுந்தவர் நல்லிருப்பும்.

28 வீதி எல்லாம் அலங்காரம்
அங்கே விஷ்ணுதலம் பொருனை ஓரம்
அன்றி விதியோடரி அறியாத கைலாசபுரம்
விளங்கும் மருதம் சிறந்த பழனம்
அங்கே விளைவுமிகுதி அனேக குளமும்.

29 ஆழ்வார் திருநகர் ஸ்டேஷன்
அமைந்தது மெத்த பிரகாசம்
இந்த ஆலயம் புகின் வானவர்கம்மியன் விஸ்தாரமாய்
அமைந்திட்டான் என்றலைஒக்கும்
இங்குள அந்தணர் கூடணிகர்க்கும்

30 பட்டணம் தாம்பிரவற்ணி ஓரம்
பார்க்கபகட்டும் எந்நேறம்
இந்தபார் அழந்திடும் நம்பெருமான் நவதிருப்பதிகளில்
பாவகான இந்த நல் க்ஷேத்திரம்
தீங்கானது நீவரும் இம்மெனும் மாத்திரம்

3I ஆலயங்கோபுரவீதி மேடை அணி அணியாய் நிர்க்குமசோதி
இங்கே அளவிலாத செல்வர்கூட்டமும்
நடனமாதர்களின் ஆடரங்கும்
மேனட அணி அணியாய் மரீதிபாலூட்டும்
மேலும் மற்க்கடஞாயத்தை காட்டும்

32 நாசறத்தாகும் இந்த ஸ்டேஷன்
இந்நகரில் மிகுதி கிரிஸ்த்து சுவிசேஷம்
நடனம்புரி செய்ய பத்மாசனமென
நாலாவித செல்வம் நினைக்கும்
மேலான வீதியும் செழிக்கும்

33 இந்நகர் ஆலயம் ஓங்கும் இதர்க்கேற்ற கல்விசாலை பாங்கும்
மன்னுமாதர்கள் பாடசாலை மாட்சியும்
கனம் மர்காஷியஸ் பங்களா காட்சியும்
இங்கே வராத மன்னர்களுண்டோ
இதுவரன் முறையாக வுங்கண்டோம்

33 குரும்பூர்கெடி இதுதேரும் கடம்பாபாசனமிதுகாறும்
இதிற் குளிரும் பலகால்வாய்களும்
பழனம்செறி நால்வாய்களும்
ஏறிகூறுங்கெண்டை வாழை பாயும்
மேகங்கண்டா காயந்தாவும்

34 கடைவீதிகளின் மிக்கச் சிறப்பு
இவைகாணயாற்கும் உண்டு பறபரப்பு
இங்கு சிறு கலாச்சாலை வீதியும் கருடவாகனன்கோவிலும்
மெத்த கனிகாயிலை கடைசறக்கு
நல்லநவதானியமும் விலைக்கு பறக்கு

12-2-24

35 ஆறுமுகனேரி நல் ஸ்டேஷன்
அழகான பெரியதோர் ஜங்கிஷன்
இதையறியாமலே காயல்பட்டணமெனக்காட்டினர்சர்வையர்
அறியவேண்டும் ரெயில் நிர்வாகர்
ஆதியில் பெட்டிஷனிங்கிருந்தே

36 உப்புவிளையும் அளம் நான்கு
இங்கேயுள்ள பாத்தி மூவேளாயிரம்
தப்பாமலே சுவை மிகுகுணமும்
ஒளியும் பழபழப்பும் ஆயிரம் அம்பாரம் வருஷம் கட்டும்
அகிலமெல்லாம் வியாபாரம் கட்டும்

37 ஏற்றும்பொருள் உப்பு முதலாம்
இறக்குமதி நெற்பல தானியம்
இதை மதிவாணர்கள் யூகித்திட்டால்
நிதிலாபமிக செழித்திடும
ஜில்லாபோர்ட்டார் தெரியலாகும் செவ்வனே யிடம்திகம் மேலணும்

38 இந்நகர் மாழிகை விலாசம்
பொன்னகரமவரை பிறகாசம்
இஃதழகாபுரியோ அமாரவதியோயென வியக்கத்தகும்.
எண்ணிரு செலவர்கள் கூட்டம்
எத்திசையோர்களும் நாட்டம்

39 இந்நகர் பிறதேசந்தோறும்
பொருநை இளைப்பாரி சமுத்திரஞ்சேரும்
எங்கும் வளந்தரு சோலையும் பாடசாலையும்
தமிழ்ச் சங்கமும
எங்குஞ்சிவபக்தர் நிறைந்த கூட்டம்
எங்கும் பஜனைசெய் வேளாளர் கோஷ்டம்

40 ஆலயம் கோபுரம் யெங்கும் அணியணியாய் வீதிதங்கும்
ஆவணச்சிறப்பு சந்தைக் கூட்டம்
அநேக உப்புவியாரிகள் கோட்டம்
ஆதிசேடனுஞ்சொல்லுந்தரமே
அமைந்தது மெத்தச் சுந்தரமே

41 இங்கே கால்மணி நிற்கும்
இதிலுள்ளவண்டிகளுட்புகுவோம்
எண்ணிலாத இங்கிலீஸ் மன்னரும்
இந்தியதேச விற்பன்னரும்
எழிற்குலமங்கையர் கூட்டம்
இவர்களைக் கண்டாலும் பாவங்கள் ஓட்டம்.

42 இதில் வரும் பிரபுக்களெல்லாம் எழிதில் கிடைப்பவரல்லர்
இவரை ஏற்று உபசரிக்க வரும் இந்நகரத்தார் மிகஅன்பு
செய்த நலம் என்னபாக்கியம் [டையார்
காயல் மகம்மதியருக்கும் சிலாக்யம்

43 பந்தலிட்டது மெத்த உன்னதம் பின்னும் பறிஷ்காரம்
செய்ததும் பிரபுக்கள் சம்மதம்
கந்தமலர்மணம் கமழ்தரமாலையிட்டு உயர்கனி கொடுத்ததும்
இந்திரலோககாக்ஷி இவையெல்லாம் பாரும் முருகேசன்

44 புரப்பட்டது ரெயிலில் உட்காரும் இந்தபுகை (மாக்ஷிகூறும்
அனல்சிவன் சத்திதேரம
இந்த புலானுடம்பை எப்படி உயிர்நடத்துமோ அப்படி
சடசித்திபிரபஞ்சம் காட்டும் இவை
மாயை அநேகம் செயல் நாட்டும.

45 எங்கே ரெயில் பறந்தாலும்
திருச்செந்தூர் ரெயில் கிணையாமோ
இகபரமுந் தருமுருகன் அருள்சேவையும்
உயர் ஐபுலன்களில் சுவை ஒரு பானுறு பார்வையும்
தவமுந் தவமுடையார்கட்காகும்
அஃதில்லார்க்கென்பயன் அமையும்.

46 செந்தூர் கெடிவந்து சேர்ந்தோம்
இனி ஜென்மப்பிணிகளுந் தீர்ந்தோம்
இவன் சிந்தும் ஆறபாறமும் கோபுரம்
கொடிமரம் கந்த தெரிசனம் ஆனந்தம்
இன்னும் காணவேண்டும் காட்சி அனந்தம்.

47 திரிசுதந்தார் வீதி பரிசுத்தம்
சிறந்தவேளாளர் சேர்ந்தாரும் நித்தம் ஸ்நானம்
செபதப நியமஜமம் செய்திகொண்டிருக்கின்றனர்
செந்தித்தல விசேஷம் பேசுவார்
இங்குவந்தாரெல்லாம் வாரீனர் மேலும்.

48 கடைவீதி சிந்து நவமணியை
கண்டெடுத்தோர் குபேரனுவர்
எவர்கருத்தையும் திருத்தும் விநாயகர் சிவாலயம் பரிவாரங்
இவைகள் காணமிகமனம் உருகுதே [கள்
கண்டிட சந்தோஷம் பெருகுதே.

49 மருதம் சிறந்த யிங்கரம்
வயல் பக்கங்களில் குமுத மலரும் மஞ்சளும் குங்குமமும்
நெருங்கிய சோலையும் கரும்பாலையும்
மயிலுங்குயிலு மிருந்தாடுமே
கணிகையாதரைக் கண்டிசை பாடுமே.

50 கடற்கரை ஸ்நானம் நியதி கழித்தோம்
கட்டளை அய்யரை யழைத்தோம்
காதலோடு எங்கள் கருணாகர சுப்பிரமண்யப்
பெருமான் திருவடி தெரிசிப்போம் வாரீர்
பிறவிக்கரை யேற்றும் கடற்றுறை பாரீர்

51 சண்முகவிலாசம் பிறகாசம்
தத்துவஞான விகாசம்
தந்திமுகன் சரவணபவன் குகன்
வள்ளிக்குஞ்சரிம்ற்றச் சாமிதெரிசன மாச்ச
சந்தனம் இலைபூதிப்பூச்சு

52 எங்குந் திருக்கல்யாண வாசல் என்று அந்தத்திருக்கோலம்
எங்கள் செந்தூர் கந்தன் கலியுக வாதன்
கடம்பன் தெரிசனம் [மே
கண்டரைகண்டாலும போதுமே உண்டாடிப்பாடிவருவோ

53 தீர்த்தவாரிவரை வசிப்போம்
மற்றத்திருநாள்த் தெரிசனமும் என்னென்றுரைப்பேன்
சிவசொரூபத்தில் மனதைநாட்டி
சிவயோகத்தின் சுழுமுனை கூட்டி
சிவஞானத்தில் மூழ்குவிக்குமே
குகனுனந்தத்தை யூட்டிவைக்குமே

54 செந்தூர் செழில்வளம் வாழ்க
எங்கள் ஜில்லா தாலூகா போர்டார் வாழ்க
எந்தச் செகத்திலுள்ளோரும்வாழ்க
மற்றப்புரத்திலுள்ளோரும் வாழ்க
இதை கற்றோர் கேட்டோரும் வாழ்க
கருதும் பிரிட்டிஷ் ராச்சியமும் வாழ்கவே.

சம்பூர்ணம்.